மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலைக் கடல் அலைகள் அரிக்காமல் தடுக்கத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை விரைவாக நடந்து வருகிறது.

Fire Accident in Rameswaram Temple

* 211. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether any fire accident took place in Rameswaram Temple;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the steps taken by the Government to prevent such fire accidents?

இராமேசுவரம் கோவிலில் தீ விபத்து

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலைய அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமேசுவரம் கோவிலில் தீ விபத்து ஏற்பட்டதா?

(இ) ஆம் எனில், எப்படி ஏற்பட்டது?

(உ) இத்தகைய தீ விபத்துக்களைத் தவிர்க்க அரசு எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) பொம்மை கடைக்காரர், பொம்மை செய்வதற்காக மெழுகினை உருக்கிடுவதற்கு உபயோகப்படுத்திய விளக்கிலிருந்து தற்செயலாகக் கடை தீப்பிடிக்க, இத் தீ மற்ற கடைகளுக்கும் பரவியது.

(உ) இது சம்பந்தமாக, அரசு ஆணை எண். (நிலை) 2064, வருவாய்த் துறை, நாள் 20—7—1972-ல் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, இம்மாதிரியான தீ விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அந்தக் கடைகளெல்லாம் அந்த ஆலயத்திற்கு வெளியே நிர்மாணிக்கப்போகிறார்களா? அல்லது தொடர்ந்து கோவிலுள்ளேயே வைக்க அனுமதிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இம்மாதிரி தீ விபத்துக்கள், இராமேஸ்வரம் கோவிலில் ஏற்பட்டதைப் போல மற்ற இடங்களில் ஏற்படக்கூடாது என்று, கோவில் உள்ளே இருக்கும் கடைகளை, வெளியே

1972 ஆகஸ்ட் 22]

வைக்க அவர்களுக்குக் கடை கட்டிக்கொடுக்க வேண்டுமென்ற யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், மதுரையில்கூட அந்தத் திட்டம் கைவிடப் பட்டது. இருந்தாலும், இராமேஸ்வரத்தில் அந்தக் கடைகளை அப்புறப் படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் காரணத்தால், கடைகளைக் கோவிலை விட்டு வெளியேற்ற ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, கடைக்காரர்கள் எதிர்ப்பு காரணமாக கோவிலை வியாபாரக்கூடமாக ஆக்கி, இரைச்சல் ஏற்படு வதைத் தவிர்க்க, கோவிலின் உள்ளே உள்ள கடைகள் வைப்பதைத் தடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதே கோவிலில் தான் உள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்தத் தீ விபத்தில் அந்தப் பிரகாரத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா? அதில் ஒரு பகுதியை வியாபாரிகளிடமிருந்து நன்கொடையாக வாங்க, திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தீ விபத்தில் சுமார் 1½ லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கடை வைத்துள்ளவர்கள் சிறிய கடைக்காரர். 100 ரூபாய், 200 ரூபாய் போட்டு வியாபாரம் செய்ப வர்கள். நன்கொடை ஏதும் வசூல் செய்ய முடியாது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற பெரிய கோவில் களில் விலையுயர்ந்த பொருள்கள் இருப்பதால், தீ விபத்து ஏற்பட்டு, வைரங்கள் காணாமல் போய்விட்டன என்றும், சதி காரணமாகச் செய்கிறார்கள் என்றும் மக்கள் பேசுகிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : எந்தக் கோவிலில் அந்தத் தீ விபத்து ஏற்பட்டு, பரவலாகப் பேசுகிறார்கள் என்பதைத் தயவு செய்து உறுப் பினர் அவர்கள் சொன்னால், நலமாக இருக்கும்.

திரு. எம். ராஜா அய்யர் : இந்தக் கோவிலுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய அரசு பொதுநிதியிலிருந்து ஏதேனும் உதவி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அறங்காவலர் குழுவிலிருந்து இதற்கான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று வேண்டுகோள்

வந்திருக்கிறது. மற்றக் கோவில்களின் உபரி நிதியிலிருந்து, அரசு ஆலயத் திருப்பணிக்கு ஒதுக்கும் நிதியிலிருந்து ஈடு செய்து, விரைவில் வேலை தொடங்கப் பெற்று, முடிக்கப்பெறும்.

Libraries in Temples

* 212. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of temples which have libraries in Tamil Nadu ?

திருக்கோயில்களில் நூலகங்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

தமிழகத்தில் எத்தனை திருக்கோயில்களில் நூலகங்கள் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 202 கோயில்கள்.

திரு. தி. க. சண்முகம்: தலைவர் அவர்களே, திருக்கோவில்களில் உள்ள நூலகங்களில் சமய சம்பந்தமான நூல்கள் இருக்கின்றனவா அல்லது மற்றும் தமிழ் இலக்கியம் சம்பந்தமான நூல்களை வைக்க அனுமதி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்து சமயத்தைப் பரப்பும் நூல்களும், தமிழில் இலக்கிய ஆராய்ச்சி நூல்களும், இலக்கியத் துறை சம்பந்தமான நூல்களும் வைத்திருக்கிறார்கள்.

Surplus Funds with the Hindu Religious and Charitable Endowments Department

* 213. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the amount of surplus funds that is available at present with the Hindu Religious and Charitable Endowments Department.

இந்து அறநிலைய ஆட்சித் துறையில் இருக்கும் உபரி நிதி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இந்து அறநிலைய ஆட்சித் துறையில் தற்போது இருக்கும் உபரி நிதி எவ்வளவு ?